576

**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**

**கல்விப்பீடம்**

**கல்விமாணி (சிறப்பு) ஆரம்பக்கல்வி நிகழ்ச்சித்திட்டம் - 2022/2023**

**இறுதிப்பரீட்சை – 2022/2023**

**மட்டம் - 03**

**EPU3331– முன்பிள்ளை மற்றும் ஆரம்பக்கல்வியில் முன்னோக்கு**

**காலம்: இரண்டு (02) மணித்தியாலங்கள்**

**திகதி:- 18.02.2024** | **நேரம்: பி.ப. 01.30 - பி.ப 03.30**

பகுதி **I** இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி **II** இல் ஏதேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடை தருக.

## பகுதி I

1. பிள்ளை விருத்தியின் நான்கு (04) பிரதான பரிமாணங்களையும் மொத்த விருத்தியில் அவற்றின் பங்களிப்பினையும் சுருக்கமாக விபரிக்குக.

2. ஆசிரியரின் வகிபங்கின் மூலம் "பிள்ளை மையக்கல்வியை" பற்றி சுருக்கமாக விளக்குக.

3. இலங்கையில் ஆரம்பக் கல்வி தொடர்பான ஐந்து (05) பிரச்சினைகளைக் குறிப்பிடுக.

4. "அனைவருக்கும் கல்வி" என்றால் என்ன? உதாரணங்கள் மூலம் விளக்குக.

5. "21ம் நூற்றாண்டில் சுயகற்றல் மிக முக்கியமானது" மேற்கூறிய கருத்தினை நீர் ஏற்றுக்கொள்கிறீரா? உமது பதிலுக்கான மூன்று (03) காரணங்களை தருக.

6. "குடும்பம்" எனும் எண்ணக்கருவினை பொருத்தமான வரைவிலக்கணத்தினூடாக வரையறுக்குக.

7. விசேட தேவையுடைய பிள்ளைகளின் பிரதான வகைப்பாடுகள் **இரண்டினைக் (02)** குறிப்பிட்டு அவற்றில் **ஒன்றின் (01)** முக்கிய பண்புகள் **மூன்றினைச் (03)** சுருக்கமாக விளக்குக.

8. இலங்கை கல்விமுறையின் தேசிய இலக்குகளை அடைவதற்கு பங்களிப்பு செய்யும் ஏழு (07) தேர்ச்சிகளை பட்டியலிடுக.

**(05 x 08 = 40 புள்ளிகள்)**

## பகுதி II

9. **(i)** பிள்ளையின் மொத்த விருத்தி என்றால் என்ன?

**(05 புள்ளிகள்)**

**(ii)** "நோக்கம், சிறப்பு நோக்கம் என்பன பாடத்திட்டத்தில் முக்கியமான கூறாகும்."
அவ்விரு கூறுகளுக்கும் தலா ஒரு (01) உதாரணம் வழங்கி, பாடத்திட்டத்தின் வெற்றிக்கு அவை எவ்வாறு பங்களிப்பு செய்கின்றது என்பதை சுருக்கமாக விபரிக்குக.

**(07 புள்ளிகள்)**

**(iii)** பிள்ளை விருத்திக்கு உடலியல் செயற்பாடுகள் எவ்வாறு உதவி செய்கிறது என்பதை உதாரணங்கள் மூலம் விபரிக்குக.

**(08 புள்ளிகள்)**

10. **(i)** இலங்கையில் காணப்படும் குடும்பக் கட்டமைப்பு முறைகளை பற்றி சுருக்கமாக விபரிக்குக.

**(05 புள்ளிகள்)**

**(ii)** "பாரம்பரிய குடும்பத்தின் அமைப்பு இலங்கை சமூகத்தில் மாற்றத்திற்கு உட்பட்டுள்ளது" மேற்குறிப்பிட்ட மாற்றத்திற்கான **மூன்று** (03) காரணங்களைச் சுருக்கமாக விளக்குக.

**(07 புள்ளிகள்)**

**(iii)** ஒற்றைப் பெற்றோர் (Single Parent) குடும்பங்கள் தமது குழந்தைகளை பராமரிக்கும் போது எதிர்கொள்ளும் **மூன்று** (03) சமூக – பொருளாதார பிரச்சினைகளை உதாரணங்கள் மூலம் மேற்கோள் காட்டி பகுப்பாய்வு செய்க.

**(08 புள்ளிகள்)**

11. **(i)** 1992ஆம் ஆண்டு கல்வி சீர்திருத்தங்களால் இலங்கை கல்வி முறையில் அறிமுகப்படுத்தப்பட்ட **நான்கு** (04) முக்கிய மாற்றங்களை பற்றிச் சுருக்கமாகக் கலந்துரையாடுக.

**(06 புள்ளிகள்)**

**(ii)** 1999இல் கல்விச்சீர்திருத்தங்கள் மூலம் ஆரம்பக் கல்வியில் அறிமுகப்படுத்தப்பட்ட குறிப்பிட்ட வளர்ச்சி மாற்றங்களை பகுப்பாய்வு செய்க.

**(07 புள்ளிகள்)**

**(iii)** 1999இல் அறிமுகப்படுத்தப்பட்ட ஆரம்பக்கல்வி சீர்திருத்தத்தின் மூலம் ஆரம்ப பாடசாலை ஆசிரியரின் வகிபங்கு எவ்வாறு மாற்றமடைந்தது என்பதை உதாரணங்கள் மூலம் கலந்துரையாடுக.

**(07 புள்ளிகள்)**

12. **(i)** விசேட தேவையுடைய பிள்ளைகளுக்கும், விசேட சூழ்நிலையில் (Special Circumstances) காணப்படும் பிள்ளைகளுக்கும் இடையிலான வேறுபாடுகளைப் பகுப்பாய்வு செய்க.

**(05 புள்ளிகள்)**

**(ii)** சாதாரண வகுப்பறை சூழலில் கற்றுக் கொள்ளும் விசேட தேவையுடைய பிள்ளைகள் எதிர்கொள்ளும் **நான்கு** (04) சவால்களை விளக்குக.

**(07 புள்ளிகள்)**

**(iii)** விசேட தேவையுடைய பிள்ளைகளுடன் பணிபுரியும் ஆரம்ப பாடசாலை ஆசிரியரின் வகிபங்கினை உதாரணங்கள் மூலம் விளக்குக.

**(08 புள்ளிகள்)**

13. பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டிற்கு** (02) சிறுகுறிப்பு எழுதுக.

**(i)** சிறுவர்கள் பங்கேற்கும் உரிமை

**(ii)** தரம் ஐந்து (05) புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பான பிரச்சினைகள்

**(iii)** இலங்கை கல்வி அமைச்சின் முக்கிய பணிகள்

**(iv)** தரம் ஒன்று (01) பாடசாலை அனுமதி தொடர்பான சிக்கல்கள்

**(10 x 02 = 20 புள்ளிகள்)**

(முழுப்பதிப்புரிமையுடையது)